ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்து.

திருமாலிருஞ்சோலைமலை

# அழகர்கலம்பகம்.

மூலபாடம்.

இது

சென்னைமாநகரத்து

கோவைசியப்பிரபுக்களில் - கம்மிட்டிஆபிசுதிரான்ஸ்லேட்டர்

ா - ா - திருவான்மியூர்

வீராசாமிப்பிள்ளை

கேட்டுக்கொண்டபடி

சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவர்

திரு - வேங்கடாசலமுதலியாரால்

பலபிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து - பிழைகளைத்திருத்தி

தமது - சரஸ்வதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இவரது - முக்கியஇஷ்டர்

ஆயலூர் - பொன்னரங்கமுதலியாரால்

நிறைவேறினது.

சாலிவாகனசகாப்தம் - ௲௭௬௬ - பிலவஸு

இதன்விலை - ரூ - ௨.

1844

+ இந்தக்குறியிட்டிருக்கிற இடந்தோறும் இன்னும்சிலபிரதிகளைக்கொண்டுநன்று ஆராயப்படவேண்டும் - அதனால்சுத்தபாடம்உள்ளவர்கள்அதைஎங்களுக்குஅறிவித்தால்அதுபரமோபகாரமாகக்கொள்ளப்படும்.

நன்றாக.... குருவாழ்க.... குருவேதுணை.

திருமாலிருஞ்சோலைமலை -

# அழகர்கலம்பகம்.

## பாயிரம்.

### காப்பு. கட்டளைக்கலித்துறை.

ஆனைக்குமுன்செல்விடபாசலத்திலழகனையெம் *
மானைக்கருதிக்கலம்பகங்கூறவரற்கரற்குத் *
தானைச்சூரர்க்குச்சடகோபஞ்சித்திக்கத்தாங்குசெங்கோல் *
சேனைத்தலைவர்திருத்தாள்கருத்தொடுஞ்சேவிப்பெனே. *

### கட்டளைக்கலித்துறை.

அத்தியின்மத்தியிலேவிளங்காவிலம்மா::கிழ *
நித்திலாகொள்ளுந்தமாலத்துருவனிவனென்பதே *
சத்தியமென்னப்புளிக்கீழ்மகிழந்தமிழ்க்கரசே *
நித்தியமாலழகன்றமிழ்கூறமுன்னின்றருளே. *

### நேரிசைவெண்பா.

முதலாழ்வார்மூவர்தொண்டர்பாதப்பொடியார் *
மதுரகவிமாறன்மழிசைக்கோ..................இதவார்
குலசேகரன்கோதைபட்டர்பிரான்பாணன் *
கலியன்றிருவடிகள்காப்பு. *

### அவையடக்கம். நேரிசைவெண்பா.

அழகர்பதின்மரருந்தமிழ்கொண்டார்யான் *
குழறியபுன்சொற்றமிழுங்கொண்டார்..........முழுதும்
கருத்திருத்திவைத்தவெண்மர்காந்தருமாய்க்கூனி *
உருத்திருத்திக்கொண்டதுபோலும். *

## நூல்.

## மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

[இவை எட்டடித்தாழிசைகள் - உ.]

நீர்பூத்தபொற்றகட்டுநெட்டிதழ்ச்செந்தாமரைமான் *
கார்பூத்தமுழுநீலக்கண்ணுமனமுங்குளிர *
அரும்புதுவைத்தோகைமிகச்சூடியதாமமுங்கவியும் *
தரும்புதுவைத்தோகைகனதனதடங்கள்புளகரும்ப *
பழமுதிர்நான்மறைகுமுறப்பதின்மர்கண்முத்தமிழ்முழங்க *
பழமுதிர்பூஞ்சோலைமலைபச்சைமரகதத்திலங்க *
வந்தவிமானத்தமரர்மலர்தூவிப்பணிசாமச் *
சந்தவிமானத்தமருஞ்சௌந்தரியபரஞ்சோதீ. *

குறித்தமுகில்பந்தரிட்டுக்குறுந்துளிதூற்றிடவாயர் *
தறித்தமராமத்தனையுந்தழைத்தலர்ந்துபழுத்துதவ *
கடும்புலிகளயர்ந்துசித்திரகாயமெனும்பெயர்விளக்க *
கொடும்பணிகண்மாலையதாய்க்குலரத்தினவிளக்கேற்ற *
அருங்கற்றூண்வெண்ணெயெனக்கரைந்தோடவிரைந்தோடி *
வருங்கற்றூணிமைப்பொழியமழவிடையுங்கயர்ந்துறிற்ப *
மிகவிளங்கோவியொழுதவெள்கியதிரிபங்கியுடன் *
சுகவிளங்கோவியர்மழலைதொனித்தகுழலிசைத்தோய்கேள்.

[இவை இரண்டடித்தாழிசைகள் - ரு.]

பலகடலுஞ்செதிலடங்கப்பசுந்துழாய்பரிமளிக்கப் *
பலகடமீன்வடிவெடுத்தாய்பார்த்தெம்மைக்காக்கவென்றே * க

போகமடங்குலகமுற்றும்பூவெனவன்புறங்கிடக்க *
நீகமடவுருக்கொண்டாய்நினைத்தெம்மைப்புரக்கவென்றே * உ

நிலக்கினியதேவகிபானீபிறந்தசுபயோக *
இலக்கினமேற்கடைப்பிடியோவிடபமலையுவந்தனையே * ௩

உதித்ததுநம்மிந்துகுலமுயர்த்ததுநந்தமையென்றே *
பதித்தமலையத்துவசபாண்டியனையாண்டனையே * ௪

தருமகதியாய்ப்பாடிதனினவநீதங்கவர்ந்தாய் *
ஒருமகதிமுனிமுதலோருள்ளமெனக்குறித்தேயோ * ரு

ஆரமுதவுததிபொங்கவமரர்குழாம்வாயூற *
ஆரமுதமதித்தெடுத்தாயடியவர்கட்கென்றேயோ * ௬

[இவை ஈரடி அராகங்கள் - ௪]

நிலமுதலியவெயினிலவுமிழ்கதிர்மதி *
குலதெய்வம்வழிபடுகுருவெனவருளினை * ௧

அரியயனரனெனவவனவனதுவென *
விரியிகபரமிருவினையெனமருவினை * ௨

அருள்சிலவறிபவனறிவறிதருமொரு *
பொருள்பலவெனமறைபுகல்சுகவடிவினை * ௩

ஒளியினுளொளியுலகுயிரினுளுயிர்மிகு *
களியினுள்களியெனமிகமகிழ்கருணையை * ௪

[இவை பெயர்த்தும் ஈரடித்தாழிசைகள் - ௪]

அடலவுணன்பாற்குறுகியத்பதிலங்கையேற்றாய் *
கடலகிலம்யாவுமுந்திகாட்டுவதுகண்டிலையோ * ௧

இலகங்கையெனத்திரைகளெறியமுனைதுளைந்தாய்வான் *
குலகங்கைகால்பிடித்துக்கூப்பிடுதல்கேட்டிலையோ * ௨

கருதுகளிறோலமிடக்கலுழனெடும்விண்பறந்தாய் *
மருதினுரலொடுதவழ்ந்தாய்மால்விளையாட்டென்றேயோ * ௩

சிறந்தபெரும்பகிரண்டத்திரளெல்லாந்திருவுருவில் *
பிறந்தகுறும்புளகெனினின்பெருமையையாருரைக்கவல்லார் ௪

சகலநற்பொருளுநீதத்துவங்கணீ *
புகல்தருகரணநீபுவனபோகநீ * ௧
மொழியுநீபொருளுநீமுக்குணங்கணீ *
விழியுநீமணியுநீவிந்துநாதநீ * ௨

இவை நாற்சீர் ஓரடி அம்போதரங்கம் - ௨.

தயரதர்தவசிலுதித்தனை
தசமுகனுருளவதித்தனை
உயர்சதுமுகனைவிதித்தனை
உரனுளசரபமிதித்தனை

இவை முச்சீர் ஓரடி அம்போதரங்கம் - ௪.

| | |
|---|---|
| செகமிசைந்தனை | கருமமண்டினை |
| ககமிசைந்தனை | தருமமண்டினை |
| செயல்கடந்தனை | கதமடக்கினை |
| மயல்கடந்தனை | மதமடக்கினை |
| சுகமுகந்தனை | அருவிழைந்தனை |
| மகமுகந்தனை | உருவிழைந்தனை |
| துன்பொழிந்தனை | அமிழ்தழைத்தனை |
| பொன்பொழிந்தனை | தமிழ்தழைத்தனை |

இவை இருசீர் ஓரடி அம்போதரங்கம். ௰௬.

எனவாங்கு.................. [இது தனிச்சொல்.

தேறியவடகலைதென்கலையெனவிரண் *
டாறெழுகரங்கவரவிந்தலோசன *
குளிர்பதமிடுசடகோபமீதெனவான் *
வெளிமுகடணிவடவேங்கடவாண *
அதிர்குரல்வளைசுடராழியாமெனமதி *
கதிர்புடைவரநிமிர்கரிகிரிவரத *
வலம்புரிபோலயன்வாகனமீண்டி *
சிலம்புறுதரளச்சிலம்பாற்றிறைவ *
எழுமணியால்கடலீந்தபொன்னுடனொரு *
செழுமணியுரமணிதெய்வசிகாமணி *
உரனுடைமதலையுமிரணியனுரமொடு *
சரபமும்வகிர்தருநரகரிரூபா *
பூமியிலசுரப்புன்பனிக்கினனெனும் *
நேமியம்பரமசாமிவாழி *
இரவினிலாடுமிறையணியொளிக்க *
அரவினிலாடுநின்னடிமலர்க்கியம்புவென் *
அண்டகோடியையுமயனையுமுந்திப் *
புண்டரீகத்துப்பொதிந்தருணின்னை *
நெஞ்செனுமலருணுறுத்துமெய்யடியர்க் *
கஞ்சுற்றஞ்சுற்றுங்கவர்தம்மை *
கண்டவிடத்துநுங்காற்றுகவென்று *
தொண்டுபட்டொழுகத்துணைசெய் *
தண்டமிழ்ச்சங்கத்தனியிறையவனே. (௧)

[இவை இருபத்துமூன்றடியால்வந்த ஆசிரியச்சுரிதகம்.]

நேரிசைவெண்பா.

அவனிவனென்றெண்ணியலையாதிருத்தி *
அவனிவனிதைக்காமழகன்...................கவடார் *
மருதிடந்தானேகடவுண்மற்றில்லைநெஞ்சே *
ஒருதிடந்தான்சொன்னேனுனக்கு. (௨)

கட்டளைக்கலித்துறை.

உனைக்கண்டகங்குளிர்ந்துன்னுமங்கூறவுனைவணங்க *
வினைக்கண்டகரிடஞ்செல்லாதிருக்கநல்வீடுபெற *
முனைக்கண்டகங்கையைநேராக்குங்காந்திமுகுந்தநந்தன்
டனைக்கண்டகணிதலிலாதென்சோலைமலைக்கொண்டலே. (௩)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொண்டல்வண்ணனென்றேயுன்குரைகழற்கமலம்பெற்றேன் *
மண்டலமளந்தகாலமற்றுநான்புறம்போசொல்லாய் *
அண்டர்தெள்ளமுதமுண்ணவாலமுண்டவர்க்கேசோமன் *
துண்டமுன்றந்தாய்தந்தாய்சுந்தரராசமாலே. (௪)

சந்தவிருத்தம்.

மாலைக்கரும்புபிறைபுனைவாளெயிற்றரமன்வன்பாசம்வீசவுடலம் *
ஆலைக்கரும்புபடுமுன்னேகணமுன்னேபுள்ளரசேறிவந்தருளுவாய் *
வேலைக்கருப்புனிதவிந்திராதியர்க்குநல்விருந்திட்டுவைத்தவிதுரன் *
சாலைக்கருப்புதவிருந்தாமருந்தேதடஞ்சோலைமலையழகனே. (௫)

[எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

மலைக்குமேல்மலைவிரசாயழகாவேத *
வான்றலைநால்குதலைமகனூர்வாளா *
தலைக்குமேலெழுதுகன்றூரியென்றெங்கள் *
தாலத்தின்மேலெழுதச்சமர்த்திலாரோ *
அலைக்குமேழுடுமலராமிதக்குங்காலம் *
ஆலமொன்றுகாயாம்பூவலர்ந்தாற்போற்பச் *
சிலைக்குமேற்செங்கண்வளரனந்தாநந்தா *
இருக்கிலிருக்கும்பொருளேயெம்பிரானே. (௬)

கட்டளைக்கலிப்பா.

பிராணெனச்சொன்முராரிபுராரிநீபிரமனீகுணப்பேதநீபூதநீ
தராதலத்திற்சராசரம்யாவுநீசச்சிதாநந்தவிம்பமுநீயன்றே
மராமரங்கொல்லிராமவிராகவவாசுதேவவனகிரிவாசமுன் *
கராசலஞ்சொல்பராபரநாதசெங்கஞ்சலோசனவஞ்சனமேருவே.

நேரிசைவெண்பா. (௭)

அஞ்சாரலும்மணிநீரருங்கிடைக்கரிய *
மஞ்சிரமாருவனகிரியே .................... பஞ்சவர்தம்
பங்கங்களைந்தான்பனிரண்டுகண்ணொருவர் *
பங்கங்களைந்தான்பதி. (௮)

கட்டளைக்கலித்துறை.

பதிக்கின்றகற்பகப்பூஞ்சோலையையெட்டிப்பார்த்துமந்தி *
குதிக்கின்றமாலிருஞ்சோலைவெற்பாநின்குளிர்வதனம் *
உதிக்கின்றதிங்கள்மெய்யுற்பலக்காடங்கொழுங்குபைந்தேன்
மதிக்கின்றகட்டழகெங்கள்கண்ணூற்குமதுகரமே. (௯)

## புயவகுப்பு ஆசிரியவண்ணவிருத்தம்.

மதுகயிடவன்சடலமெழுகுபடவெங்குருதி
மதுவினில்வழிந்தொழுக இறக்கிநனிபிழிந்தன
வடிதயிர்முகந்துரலின்வரியவுமிசைந்துபய
மருதையுமிடந்துபினும் அடுக்குறிநெய்கவர்ந்தன
மகளிர்நகசந்திரகலைபதிபிடர்தழும்புபட
மணிகணொறுஞ்சுரபி திருப்பருளில்சுமந்தன
வயிறுகுழையும்பொழுதுசிறுகுமுதமொன்றநிறை
மடிமுலைவிடாத்திருவி றுணாத்தசுனைகறந்தன

இது முதலடி.

புதுவையின்மடந்தைகவிபதின்மர்தமிழ்கொண்டினிது
புளகிதமெறிந்துமர கதக்கிரியினிமிர்ந்தன
பொதுவர்தருபெண்கள்முலைதிமிர்மிறுகமதங்களொடு
புதியபசுமஞ்சள்குழு குழுக்கவிமிவளர்ந்தன
புலிபிடுகிடென்றதிரவெதிர்தொடையறைந்துசமர்
பொருமலர்கலங்கமுகம் இடித்துத்தகநுழைந்தன
புகையுமொருகஞ்சன்விழமுரணடுநடுங்கயம
புரநெளியவும்பர்மலர் இறைக்கவமர்புரிந்தன

இது இரண்டாமடி.

மிதிலைமயிலின்புருவநிகரலதிதென்றரனும்
வெருவிடவவன்சிலையை முறித்தவையிலெறிந்தன
விசையினெடுகொம்பினிணைதிருகிமணிசிந்தரண
வெறிகொள்கெசகும்பமது தகர்த்துவிருதணிந்தன
விசயன்ரதவெண்புரவிகருவிகொடுரிஞ்சிமிக
மெழுகுசெய்துதண்புனலின் மினுக்கியுளைவகிர்ந்தன
விரனுனிசெவந்தபடியுலவைகள்கொழுந்துவிட
வெணெயின்மலையுங்கரைய இசைத்தகுழல்பயின்றன

இது மூன்றாமடி.

அதிர்கனகனெஞ்சமிருபிளவுசெய்துறுஞ்சமுக
அருகுதிரமொண்டுதவி நிணத்தகுடர்பிடுங்கின
அலைதொடைபுனைந்துரகம்வளைமலையைவென்றுதொழும்
அரசிளமகன்குடுமி திருத்தியலர்புனைந்தன
அணிமகரகுண்டல-நல்விசயமகளுஞ்சலென
அசையவவள்செம்பொனெயில் எனத்தொடிகள்செறிந்தன
அமுதமதிவந்துதவழிடபகிரிநின்றவடிவ்
அழகர்துளவுந்தளவு மணத்ததிரள்புயங்களே. (௰)

இது நான்காமடி.

நேரிசைவெண்பா.

புயங்கசயனாபுயல்வண்ணாபூமின் *
முயங்குமணிமார்பாமுகுந்தா…………………மயங்கும்
ச்ருப்பழகாதன்பனையாள்கண்ணாதென்சோலைப் *
பொருப்பழகாநீயேபுகல். (கக)

[வண்டுவிடுதூது. எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

நீயாகிலுஞ்சொல்லொணாதோபிரிந்தேகும் *
நிட்டூரருக்கந்தநெட்டாவினிலையோர் *
பாயாகவிழிதுஞ்சுமுகில்சோலைவெற்பில் *
பசுந்தேன்விருந்துண்கருந்தேனினரசே *
மீயாகும்வெளிநாகம்வெண்பாலெனுந்தண் *
மேகங்களாரிபுள்ளிமீனஞ்செவ்வானம் *
வாயாகும்ரவிகான்றமாணிக்கமெயிறா *
மறியாலமறுமூச்சுவாடைக்கொழுந்தே. (கஉ)

[இரங்கல். அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

கொழுநனைவிட்டாய்பூவைநிரைக்கின்றாய் *
வண்டிசையைக்குறித்தாய்கண்ணீர் *
விழுவதறாயொன்றுமருந்தாதுகைப்பாய் *
இதழ்புலர்ந்தாய்வினையேன்போன்றாய் *
எழுவிடையுந்தழுவியொருவிடைமலையில் *
வாழழகரிந்திரநீலச் *
செழுமலையொப்பார்நாட்டில்வெண்டளவே *
கண்டளவேதேறினேனே. (கங)

[தவம். எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

தேறாதுவனம்போயெளவனமும்போனீர் *
சிறுகிழங்கைக்கொண்டுபெருங்கிழங்கைக்கொண்டீர் *
ச்றாதபலஞ்சுவைத்தோர்பலமுங்காணீர் *
இலைமேய்ந்தும்பேறிலையேயிதுவோயோகம் *
மாறாதுசருகுதின்றுசருகுபட்டீர் *
வாயுநுகர்ந்தீர்வாயுமௌனமானீர் *
ஆறாததீயினிற்பேர்தீயரோநும் *
அருந்தவமேதவமழகர்க்காட்படீரோ. (கச)

கட்டளைக்கலித்துறை.

படவரவப்பள்ளிமாலலங்காரர்பழமறையும் *
தடவரவச்சிரத்தண்டையுமார்ப்பச்சகடுதைத்த *
திடவரவச்சுதசொல்லாவிடுக்கணுந்தீர்த்தருளக் *
கடவரவற்றறைக்கருதுமவனைக்கருதுமினே. (கரு)

[நேரிசைவெண்பா. மேகவிடுதூது.]

மின்னுமுகிலேசோலைவெற்பழகர்வந்திலார் *
உன்னையெதிர்கண்டேனுயிர்தரித்தேன் ..........ஒன்றார்
வெருவவிருதூதுமவர்மேனிநிறமுற்றும் *
மருவவிருதூதுபோய்வா. (கசு)

[இரங்கல். எண்சீர்க்கழிநெடில் வண்ணவிருத்தம்.]

வாளுந்திகிரிப்படையுங்கதையும்வளையுர்வளையஞ்சிலையுர்புனைவார் *
ஆளுங்குலபூதரனூர்மலர்மானன்றுள்பிரியாரொந்நாள்வருவார் *
நீளுங்குழலிர்காமம்படுதீநெய்விட்டதுகாணீர்பெய்பனிநீர் *
வேளுங்கணையும்பிறகாமவர்தாம்வேயூதுவதுந்தீயூதுவதே. (கஎ)

[எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

வேயினுனிரையழைத்துக்களிறன்றழக்கவோடி *
மென்பிடிக்காய்மான்பின்போய்விடைமலைமேலிருப்பீர்
பேயின்மாமுலைபருகுமச்சுதரோகேளீர் *
பின்னைக்குமுன்னுளைபின்னைக்கென்றுமல் *
போய்வாசவன்றருவைவேரினொடுங்கொணர்ந்தீர் *
புதல்வனூர்மக்குமுந்திப்பூவிருப்பென்றளித்தீர் *
தூயகோவியர்க்குமெல்லவிரழ்கொடுத்தீர்நம்பும் *
தொண்டன்முடிமேற்றுளைச்சூட்டுவதுங்கடனே. (கஅ)

சந்தவிருத்தம்.

கடதாரைகுன்றுதவிபாசன்முன்றுவுககராசனுந்தாமுநொடியூடே *
வடமேருவுஞ்சோனைமழைமேகமும்போலவருமாலலங்காரர்பதிகேளீர்
சடகோபர்தம்பாடலெனவேபசுத்தேறல்தவழ்சாரல்சங்கிலுமணியாலே
திடராகமஞ்சிரநதியோவிடுந்தூயதிருமாலிருஞ்சோலைமலைதானே. (ககூ)

வண்டுவிடுதூது. நேரிசைவெண்பா.

மலையழகர்வண்டினமேவண்டுவரையார்காண் *
நிலைகொள்பொதியவிரையைநீங்கார் .... .... ....தலைவரவர்
ஆழியுடையாருமக்குண்டாறுகால்பேர்சுமந்தீர் *
வாழிசெல்லாஞ்சொல்லாமால். (உய)

கட்டளைக்கலித்துறை.

மாலாகும்வேலையினீலாசலமொத்துமாப்பறவை *
மேலாகவந்தருள்வாயெங்கள்கோசலைமெய்வயிறென் *
ஆலானதிலிளஞ்சேயாயுறங்கியசோதைகண்போல் *
சேலாயெழுமழகாகுலபூதரச்சீதரனே. (௨௧)

அம்மானை. மடக்குக்கலித்தாழிசை.

சீதாராஞ்சோலைமலைச்செல்வனைமுன்சந்ததியா *
மாதரசோதைவளர்த்தனள்காணம்மானை *
மாதரசோதைவளர்த்தனளேயாமாகில் *
ஆதரவில்லார்போலடித்ததேனம்மானை *
அடித்ததொருவன்மத்தாவல்லவோவம்மானை. (௨௨)

[மடக்கு. பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

மானமாலழகர்பதிகணூற்றெட்டே, மற்றவையாவுநூற்றெட்டே *
வளரகநந்தனந்தமாமனையே, வதைத்ததுமந்தமாமனையே *
ஏனமாயெடுத்ததெட்டுமாதரையே, இணங்கியதெட்டுமாதரையே *
ஏற்றதுகையவர்க்குடையுமைவரையே, ஏந்தியகுடையுமைவரையே *
ஆனைகூப்பிடுமுன்புகுமிடங்கரையே, அன்றுகொன்றதுமிடங்கரையே
அன்னையுங்கனகன்கைபொருந்தானே, அண்டகோடிகள்பொருந்தானே
பானமுங்கரும்பேய்வனமுலைப்பாலே, பயிற்சியும்வனமுலைப்பாலே *
பாயலுமரவுக்கரசனாலிலையே, பாஞ்சுடரவனலாலிலையே. (௨௩)

கட்டளைக்கலித்துறை.

இலையும்பசும்புல்லுஞ்செஞ்சூட்டரவுமிடைச்சிமடித் *
தலையுஞ்சயனங்கொண்டாடியேன்மனத்தாமரையின் *
றலையுஞ்செயலொழித்திங்கிருந்தாலென்னவஞ்சனமா *
மலையுங்கடலும்பொருந்தமிழ்ச்சோலைமலையரசே. (௨௪)

[மறம். பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

அரசர்தூதகவிஞர்தூதரயனொடுந்துதிக்கவே *
ஐவர்தூதராயளித்தவழகர்நாட்டின்மறவர்யாம் *
பரசிகாலதூதரும்பறப்பரெங்கள்பேர்சொலில் *
பயமிலாதுசெல்லுமென்றுபயமிலோலைவைத்தனை *
+சரசம்வாசியென்றுசொல்வைசரணிதேடுகாவலர் *
தளமிணக்கமென்கிறாய்சரந்தொடுக்கவேணுமோ *
சிரமிருக்கவேண்டிலுங்கள்திருமுகங்கிழித்தெறி *
சேரர்பெண்ணையீவர்போசிறாரினிப்பொறார்களே. (௨௫)

இதுவுமது. பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பொறுபொறாதபசிபொரும்முத்திப்புனைசுருட்டோலையைத்தின்று
புரவலர்காதிற்சொருகுசந்திரிகைபுடலிறத்தழகர்சீர்ப்பதியின் *
மறவனொன்றறிந்துங்காரிகைகேட்டாய்மதமலோலவதுபுலவனைக்கேள் *
வயலிலேயரிவைசிலையிலேதாரிபாத்திறுமண்ணினும்பாவை *
குதிதிகழ்தையல்பாலனர்பால்வஞ்சிகுடக்கினிற்கோதையுமாங்கே *
குன்றின்மேற்குற்றுவிளம்பிடிநல்லகுமரியுண்டடவியிலுடனே *
நறுமணங்கூடுஞ்சோறுமுண்டோடுநங்கையைப்பார்வினைமுகத்தில் *
ஞாலமேனியகள்வாலையேபடைத்தானரியொடுந்திரிவதுதிரமே (௨௬)

மடக்கு. கட்டளைக்கலிப்பா.

திரவிருப்பணிதாமத்திகிரியே, செங்கைமேலணிதாமத்திகிரியே *
வரதர்மொய்ம்புகுலவரவிந்தமே, வாய்கண்கால்கைகுலவரவிந்தமே *
உரமிசைக்கரும்பன்னகமலையே, உறையுளுங்கரும்பன்னகமலையே *
அரசருக்கிடமுத்தமர்சங்கமே, அழகர்சேரிடமுத்தமர்சங்கமே. (௨௭)

கட்டளைக்கலித்துறை.

மேகங்கடல்மணிகாளநந்திபூவைமென்காவிகள்மை *
மாகந்தொடுபச்சைநின்றுருக்காட்டமனங்குளிர்ந்தேன் *
சோகந்தவிர்ந்தனென்மாலிருஞ்சோலைச்சுரும்புசெய்த *
யோகத்திகழழகாவவைவாழியொளிசிறந்தே. (௨௮)

நேரிசைவெண்பா.

சிறந்துன்பதந்தொழுவார்சேவடிதொழாமல் *
இறந்தும்பிறந்துமிளைக்கே....................பறந்தும்
மிகவேசற்றேனிடபவெற்பாவசோதை *
மகவேசற்றேகடைக்கண்வை. (௨௯)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வைக்குமிடத்தன்புவையாமாந்தர்காலம் *
மறலிகதையறியீரோவருமேநாளை *
திக்ககதைபுகுமேநுங்குணமும்போமே *
சாமும்போமேயெடுத்ததனுவும்போமே *
திக்கிலவேறிக்கணமேசோலைவெற்பில் *
சீதரசஞ்சீவிதனைத்தேடிக்கொள்ளும் *
துக்கமறும்நமனோடத்துரப்பீர்யார்க்கும் *
தோற்றிடுசொருகாலுந்தோற்றிடீரோ. (௩௰)

கட்டளைக்கலிப்பா.

தோற்றும்பொய்கைவிடாதாருவியுந்துலங்கவிட்டவர்சோலைவெற்பார்சந்தச்
சேற்றுமொய்ம்பரிவர்க்கரிதோநமதிருக்குளக்குறைதீர்ப்பதுமாவலி *
ஊற்றுநீரினிதென்றேகுடங்கைகொண்டுற்றநாளுங்கொருகால்விண்ணுச்சிதெண்
டாற்றுநீர்தந்ததிங்கொருகாலுலகளந்தபோகமனைத்துங்கொடுத்ததே.

கட்டளைக்கலித்துறை.

கொடுக்கின்றசெங்கையழகனென்றேறுதுங்குழகன்வெய்யோன்
எடுக்கின்றசக்கரத்தேரோடிலங்குமிடபவெற்பில் *
அடுக்கின்றவாயிரம்பேரோசிரணமஞ்ஞானவிருள் *
+ தடுக்கின்றவாறுமுண்டோபனிகாண்புன்சமையங்களே. (௩௨)

அறுசீர்க்கழிநெடில் வண்ணவிருத்தம்.

சமையமெனமுதுகடவுகடவியுயிர்கறுவிவருசமனுமொருதிரணமிவனே
அமையுமெனவுழலும்பமபடருமொருமசகமெழுதயனுமவனளவுநமர்காள்
கமையுரககிரிபிறைவர்கரிகிரியிலவரதர்வளர்கமலைதனகிரியையகலார் *
இமையகிரிரசதகிரிகனககிரிபரவும்நமதிடபகிரியழகர்துணையே. (௩௩)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

துணையென்றுவந்தேமெம்மைத்தொடர்ந்துமாலாக்கிக்கொண்டாய் *
அணையென்றுநாகமீந்தாயாங்கருடனைவிடேமால் *
இணையொன்றுமில்லாய்நல்லாயிசைசர்வேசபுல்லும் *
சுணையென்றவழகாவெண்ணெய்க்களவனேதுளவினனே. (௩௪)

[எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

துளவழகர்கலக்கவரவஞ்சலிக்குங்காலம்
தொனித்திடிகள்கலக்கவரவஞ்சலிக்குங்காலம்
வளமலிவெற்பருகுகருமஞ்சாருங்காலம் *
வாடையுயிர்பருகுகருமஞ்சாருங்காலம் *
களிறுருளச்சிலையருவியம்புதைக்குங்காலம் *
காயமுறுஞ்சிலையருவியம்புதைக்குங்காலம் *
தளவமளிபாடீரப்பூச்செறியுங்காலம் *
தளவமளிபாடீரப்பூச்செறியுங்காலம். (௩௫)

[எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

காலமுகந்தானுமேலமுகந்தானும் *
காமனைவாய்த்தானுமாமனைமாய்த்தானும் *
ஞாலமடுத்தானுஞ்சூலமெடுத்தானும் *
நளினவிருப்பானும்புளினவிருப்பானும் *
நீலமதித்தானுஞ்சீலம்விதித்தானும் *
நீதிபொழிந்தானுஞ்சோதிவழிந்தானும் *
சாலநிறைந்தானுமாலமுறைந்தானும் *
சலமலைவென்றானுங்குலமலைநின்றானே. (௩௬)

### கட்டளைக்கலித்துறை.

மலைதாங்குமாயர்வனகிரிக்கேமழைதாங்கிச்சந்திர *
கலைதாங்கியிந்திரசிலைதாங்கிக்கஞ்சமுந்தாங்கியங்கே *
கொலைதாங்குநீலங்குமிழாம்பல்தாங்கிக்கொடியொன்றின்மேல்
நிலைதாங்குகோங்குமுந்தாங்கியொர்பூங்கொம்புநிற்கின்றதே. (௫௭)

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேனைப்பழித்தவிசைக்குயில்காள்செம்மாந்தழைக்கப்புறப்பட்டீர் *
சேனைப்புயல்போலனங்கனம்புதொடுத்தானினிமேற்றெருட்டப்போமோ
ஆனைக்கரசனிடுக்கணிருட்கருணைதையம்போலிமைத்தசெம்பொற்
றுனைத்திருமாலலங்காரதந்தாரிந்தாதந்தாரோ. (௫௮)

### மடக்குத்தாழிசை.

தாரமருங்காமனப்புள்ளே, தைக்குமருங்காமனப்புள்ளே *
சாக்கோடங்கங்குலைபடவே, தகுமோவங்கங்குலைபடவே *
வேரோடின்பவளவனமே, விடமோவின்பவரவனமே *
மேசம்பாவிவருந்திடரோ, விதிகாண்பாவிவருந்திடரோ *
மாரனுடைவாட்கேதகையே, மயல்கொண்டுடைவாட்கேதகையே
மணந்தவிராவம்போருகமே, வந்தவிராவம்போருகமே *
ஆரங்கடுக்குமென்னுரையே, ஆருக்கடுக்குமென்னுரையே *
அலைகவராவெண்ணந்தினமே, அழகர்வராவெண்ணந்தினமே. *

### நேரிசைவெண்பா. (௫௯)

தினகரனும்பால்வெண்டிங்களுங்காரொன்ன *
வனகிரிவாழ்காயாம்பூவண்ணு ................ அனகா
அறவேதவித்தேநின்னம்புயத்தாள்காணு *
தறவேதவித்தேனருள். (௬௰)

### [ கலி. பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம். ]

அருணன்பரிபோற்பரியிலகவமரில்விசயன்றேர்கடவும் *
அழகரிணையில்குழகரொலைமயாளும்பெருமாள்வாளரக்கர் *
செருவென்றிறுத்தார்மதுவார்க்குஞ்செயலைமுடித்தார்பின்னுமன்பர் *
தேனுக்கலையாமற்கருணைசெய்தாரவர்தந்திருவடிகள் *
கருதுங்கவியேங்கணமடத்தைக்கழுவுமினியவிணையடையும் *
கஞ்சாக்கருக்குவலைநிறையுங்கற்பத்தயன்வீழ்ந்தனன்று *
குருவிசாரமச்சமறுங்குலவாரணங்கள்மூன்படியும் *
குறும்பாட்டையுமோதிரிம்வாருங்குடியும்படையும்வேண்டியவே.

[பறவைவிடுதூது. எழுசீர்க்கழிநெடில் சந்தவிருத்தம்.]

வேண்டலர்நகைக்கஒருபாங்கியும்வெறுக்கஅனை *
வேங்கையின்அதட்டமதன்வில்லாலே *
தூண்டில்படுமச்சம்என நான்பதைபதைக்கும்விதி *
தூங்கிஇரைகொத்திதிமிர்புள்ளீரோ *
பாண்டவர்துதிக்குமயில்கூந்தல்சொருகத்தவள *
பாஞ்சசனியத்தொனிசெய்செவ்வாயர் *
ஆண்டுதருவற்குநிழல்இந்தவனவெற்பில்எனை *
ஆண்டஅழகர்க்கினிதுசொல்லீரோ. (௬௨)

கட்டளைக்கலித்துறை.

சொல்விடபாசலமாயர்நன்னாட்டிற்சுடர்க்கொதுங்கும் *
அல்லிடர்தீர்குழலாய்நின்படாமுலையானைகண்டால் *
மல்லிடறுந்திண்புயத்தார்கனகவளைநிறைப்பார் *
புல்லிடவுஞ்செய்வர்இந்தார்பிடியென்றிப்பூந்தழையே. (௬௩)

பாண். தாழிசை.

தழைவிருந்தவனத்தர்பூமிசைகுழைவிருந்தவனத்தனை *
தந்தசுந்தரராசகேசவர்தம்பதங்களினினைவினார் *
இழைமருங்குடைவாணியுந்தொழவிங்கொர்பாணருளாரவர் *
இசைபுகுந்திடுகாதின்மற்றவரிசைபுகாதுதகாதுநீ *
+ { மழைதொடுங்கொடிமாடவீதியில்வந்ததேபிழையிறையிவண் *
வரத்தைவிட்டனர்ஞானம்வந்துபரத்தைநச்சினர்வீணையும்
பழையபேச்சுளாயுந்தொடுத்தனைபுதியபேச்சுளாகாணது . * }
பாடினிக்குமவட்கெழுந்தருள்பாடினிக்குமனாரமனே. (௬௪)

[ஊசல். எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.]

மணங்கமிழ்ப்பூவையுமயிலுந்தமாலக்காடும் *
வண்கிளியும்நீலவெற்புமடமான்கன்றும் *
இணங்குகடலுந்துகிருங்காருமின்னும் *
யமுனையெனுந்திருநதியுமெகினப்பேடும் *
கணங்குழையகோசலைதேவகியசோதை *
கண்மணியும்பாவையும்போற்கமலவீட்டில் *
அணங்கரசினுடன்குலவியாடிரூசல் *
அலங்காரமாயவரோயாடிரூசல். (௬௫)

[தவம். எழுசீர்க்கழிநெடில் சந்தவிருத்தம்.]

ஊசிமுனைநின்றுமெனதாழ்குழைநுழைந்துமென *
ஊடரிலிருந்துமெனவளைபோலே *
காசினிசுழன்றுமெனவானிடைபறந்துமென *
காயமிதெழுந்துவிழும்வினைபோமோ *
நீசரையுமண்டர்செயசோலைமலையின்கண்முழு *
நீலமலையுண்டுதொழுமியலாதேல் *
கேசவமுகுந்தமதுசூதனவனந்தசக *
கேதனவெனுந்தவரினினைவீரோ. (௪௬)

கட்டளைக்கலித்துறை.

நினையாதவர்தலைமையாரலங்காரனைநேர்ந்துநந்தன் *
தனையாதவர்தண்பவென்றிடபாசலச்சாரலிற்போய் *
முனையாதவர்தகைதீர்சிலம்பாற்றின்முடையுடலை *
நினையாதவர்சன்மமுஞ்சன்மமோவிந்தநானிலத்தே. (௪௭)

சந்தவிருத்தம்.

நிலங்குலவுநாபர்பணிலங்குலவுமுத்த *
நிரைக்குமருவிக்குலவரைக்குமருவியகார் *
இலங்கையில்வெவ்வாளிகொடிலங்கையிலிருக்கும் *
இராவணவிராவணனிராவணமறுத்தோர் *
அலங்கலையளித்தனரலங்கலைகடந்தும் *
அந்தமதனுக்குமனைசந்தமதனுக்கும் *
கலங்கலெனெனக்கணிகலங்கலைவைதம்மின் *
கையிலமனைதாருமலைசயிலமனையாரோ. (௪௮)

கொச்சகக்கலிப்பா.

ஆராமவெற்பிலமுகர்சுருதிக்குமெட்டா *
ஏரார்பதந்தீண்டவெத்தவங்கள்செய்தனவோ *
சூரானவன்சிலையுந்துந்துமியென்புஞ்சகடும் *
காராவகட்டையும்வெங்காளியப்பேர்நாகமுமே. (௪௯)

மதங்கி. தாழிசை.

காளமேகமும்வெளிறமின்னியகண்ணனூர்வனகிரியினில் *
காமதங்கமதங்கமாமெழின்மாமதங்கமடந்தைகேள் *
தாளநின்முலையிடைகுறுந்துடிதவளசங்கதிர்களமுகம் *
தக்கசந்திரவலயம்நூபுரசரணமென்பதுமத்தளம் *

'நீளும்யாழினமுன்கைகார்குழல்நெற்றிவேள்தனதம்புரு *
நிறுத்தினன்மெருசற்றுடுக்கைநெகிழ்க்கவேண்டுநின்சிந்தையே
நாளுநச்சினனுடகத்தினிநட்டுவாவெனுமதிசயம் *
நாட்டவாளிணைசுழலுமுன்பலகூட்டவாள்சுழல்கின்றவே. (௫௰)

நேரிசைவெண்பா.

சுழல்காற்றைமாய்த்துஞ்சுடர்நெருப்பையுண்டும் *
நிழல்பார்த்திடபகிரிநின்றேன் .......... குழலூதிக்
கற்றுக்குவித்தகடவுளரவனையனைத்தும் *
பெற்றுக்குவித்தபிரான். (௫௧)

[௫௫ - அடிநேரிசையாசிரியம்.]

வித்தகர்கருத்துட்பத்திபாய
நீலம்பழுத்தகோலமேனி
கார்க்கடன்முகந்தசூற்புயலென்று
கதிரிளங்கொங்கைச்சதிரிளமங்கையர்
இயலுறுகலாபமயினடமாட
காயாமலர்விரிகாயாவனமென
அளையரவல்லிவளையரமகளிர்
குழலிசைவண்டுகுழலிசைபாட
அங்கையிற்றங்குஞ்சங்கமுந்திகிரியும்
புதையிருள்சீக்குமதிகதிரொன்ன
கவண்கலாலிசைசெய்செவந்தவாய்ம [ழலைக்
கொடிச்சியர்கண்போலடிக்கடிசுனை [தொறும்
பதுமச்செங்காடிதழ்குவிந்தலர[க்கு
இருவகைக்காந்தமும்பெருமுனிவர்
புனலும்புகையாக்கனலுங்கொடுப்ப
வனத்திரிமேதியினஞ்சொரிதீம்பால்
கங்கையிற்பரக்கப்பொங்குதேன்வெ [ள்ளம்
சாம்புநதம்போன்மேம்படுசாரல்
சோலைமாமலைமேலினிதமர்ந்தோய்
அதிர்ந்துவெண்பரிகளெதிர்ந்தவெண் [றஞ்சி
பசும்பரியேழும்விசும்பிடைமறுக
விரிதிரைகொழிக்கும்பரிபுரநதியோய்
மழுப்படைக்கடவுள்விழிக்குடையாத
சித்தசர்கோடியொத்தகட்டழக [கா
சடைகொடுவேட்டவிடையுடையவற்
புரஞ்செற்றருளியபரஞ்சுடர்மூர்த்தி
குருகூர்விளங்கவருசடகோபர்
வழுத்தவிர்நான்மறைவிழுப்பொருள் [பழுத்த
வாக்கெனுமமுதந்தேக்கியவொருநீ
புவிமேற்சிற்சிலர்கவியுங்கொண்டனை
ஆங்கவைதமக்குப்பாங்கெனும்வனை [காய்ப்
புளியெனமகிழ்ந்தனைபோலும்
எளியேன்புன்கவியேற்பதெத்திறமே. (௫௨)

[குறம். எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.]

ஏற்றபூங்கோதைகேளிடபமால்வரையில்வாழ் *
இளங்குறப்பாவையான்விளங்குறப்பாவையும் *
சாற்றுவேன்கண்ணார்முன்வெண்ணெயாக்குவியவே *
தானடுக்குறிசொனேனென்சயிலமாதினைமுதற் *

+ {போற்றினேனுழியின்னெல்லையுஞ்சங்கையும் *
பூரியெட்டக்கரஞ்சீரினிட்டெம்பிரான் *
தோற்றுவார்வாக்குநன்கூழ்பெலங்கஞ்சியச் *
சுதர்விடாரம்பரத்துணிவையாயினியமே. (ருரு)

கைக்கிளை. மருட்பா.

இனியஞ்சநெஞ்சேயினியவிச்சயேழும் *
கனியாறுகாலுமிருகாலும் .................. முனிவர்
தொழுதாளழகர்சுரும்பில் *
எழுபூவாய்ந்ததிவளணங்கலளே. (ருசா)

சித்து. தாழிசை.

அலகைமாமுலையுண்டகொண்டல்புள்ளலகையன்றுபகுந்தமால் *
அழகர்தாள்தெரிசித்தசித்தரனுக்கிரகம்பெறுசித்தர்யாம் *
சலனமேனொருகடகநற்கரிதனையழைப்பிமுன்னுகமா *
தங்கமாக்குவெமெய்தராவிடுசந்தமிக்குயர்பணம்வரும் *
இலகிரும்புதனைப்பொன்வெள்ளியொடேற்றுவோமுனைகுறைபடா
+ {தெடுத்ததாம்பிரமாழைமச்சநம்மிரதவாதமதன்கையிற் *
பலமருந்தறிவொஞ்சொலவோமதிபசியவர்க்குபசரியையா *
படியளப்பநமக்குமாவடைபழவனம்பிரியமப்பனே. (ருகு)

கட்டளைக்கலித்துறை.

அப்போதகத்துறைசெந்திருமார்பத்தழகர்பனைக் *
கைப்போதகஞ்சொன்னமாயமொக்காலங்கருணைசெய்வார் *
மெய்ப்போதகநமக்கெந்நாள்வரும்வினையென்றொழியும் *
எப்போதகமுமமதையும்போம்புகலேலழைநெஞ்சே. (ருசா)

[சம்பிரதம். ௧௪-சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

ஏழுலோகமுமிக்கமண்டலத்தாடடைத்திடுவோங்குணக்குவெய்யோர் *
எமதிசைபுகச்செய்வோமுத்தரத்தூடுபன்னிருதிங்களெண்ணிவிடுவோம் *
வாழ்குகையுளண்டமாயரம்பையமாநாரதனைவரவழைப்போம்படர்கொடி *
மருப்பங்கயங்கள்பல்குதிரைகுடைசுனையிலெழமாதேரையடையநினைவோம்
தாழ்வறும்புல்லையடுபுலிசெய்வோந்திரணத்தையுந்திருத்தூணக்குவோம் *
தருமெறும்பிதனைமதகரிசெய்வோந்துவரையைச்சண்பகாடவியாக்குவோம்
ஆழிநீர்முன்பொருப்பாக்குவோமெய்யகலுமாவிகள்வரப்பண்ணுவோம் *
அதிரகசியங்கேளும்அழகர்தாட்காளலாஅதிதெய்வமுன்விடுவமே. (ருஎ)

கலிவிருத்தம்.

விடலருமறையினும்விடவராவினும் *
நடமிடுமழகரெந்நாளிரங்குவார் *
தடமுலைமயிலொருசரம்விடாமுனம் *
அடன்மதன்விடுசரமனந்தகோடியே. (௫௮)

[எண்சீர்க்கழிநெடில்.]

கோடிதவமுயன்முனிவோர்க்கருள்பதத்தாமரையார்
குறியவராகம்பெரியநெடியவராகமுமாய் *
ஆடிரணசிங்கமுமாமெம்மான்பல்கலையோ *
டம்புலிதாழ்கோட்டிடபத்தணிவரையைக்கண்டால்
மூடிருளைப்பொருதறுகண்மறலிகடாவிடிலே *
முடுகொருகடாமடங்குமூன்றுகடாமடங்கா *
தோடிவரக்குளிறிவெளிறியகளிறுவந்தே *
உறப்பிடரினிணைத்துலவும்பிறப்பிடர்மற்றிலையே. (௫௯)

தாழிசை.

இடர்களென்றதிரைகளாலிடிந்துதீரம்வீழவே *
எழுந்தபாவசாகரத்தினிடைமிதந்ததிரணம்நான் *
மடமைநெஞ்சநாளிலேமகிழ்ச்சிகூர்ந்ததெம்பிரான் *
மந்திரமூலசொருபகாந்தியிந்திரநீலமல்லவோ *
உடன்மறந்தமறவிராதனுறவிராததறுகணு *
ணொடுங்கவந்தனுவிபோயொடுங்கவந்தநிருதரும் *
திடமலைந்துவிடமலைந்துதென்னிலங்கைவென்றவன் *
திங்கள்குன்றமுத்திலங்குநங்கள்குன்றமாயனே. (௬௰)

கட்டளைக்கலித்துறை.

மாய்கின்றதேவர்க்கெலாமணவாளரேர்வடிவழகர் *
வேய்கின்றகுல்லையென்றேதருவாரெங்கள்மின்கரும்பு *
சாய்கின்றபூவணையாலைபொன்னோலையிற்றூவுங்கண்ணீர் *
பாய்கின்றசாறுகுறுவேர்பிதுங்கியபான்முத்தமே. (௬௧)

[எண்சீர்க்கழிநெடில்.]

பாலிருந்தநீர்பிரிப்பீரொருநீருங்கள் *
பங்கயத்தோன்றன்னைவைப்பாரானென்கண் *
போலிருந்தானையுமெனையும்பிரித்தானிந்தப் *
புண்ணியமுங்களையடையும்போமோசொல்லீர் *

சேலிருந்தகொடியோனைப்பெறுமால்சோலைச் *
சிலம்பாற்றினிடைதெவுட்டித்திரைமுத்தூஞ்சல் *
மேலிருந்துவிளையாடிக்கமலவீட்டின் *
மென்பேட்டினுடன்செல்செங்கால்வெண்புள்ளீரோ.

[பதினான்குசீர்க்கழிநெடில்.] (௬௨)

புள்ளின்வாய்கிழித்தார்மருதிடந்தழித்தார்பூதனையாருயிர்கழித்தார் *
புறஞ்சுழல்காற்றுண்டுதிரமொண்டிறைத்தார்புரவியோடிரவியைமறைத்தார்
துள்ளியகுயிலைப்பூத்ததே:மாவைத்தூற்றுமன்னையைச்சிறுகாற்றைச் *
சுடுமதிகோரமதியினைவிடுத்தார்தோன்றியமதியையென்சொல்வேன் *
விள்ளரும்பிலத்துட்பணிகளோவென்றுவிகங்கபூபதியெழக்கனகன் *
வெங்குடர்பிடுங்கியெறிந்துரங்கிழித்துவிடாய்க்குவெங்குருதிநீருறுஞ்சி
பிள்ளையைப்புரந்தவெள்ளெயிற்றகல்வாய்ப்பெருங்குரற்சிங்கமெங்கணுந்தேன்
பெருக்கெறிசோலைப்பொருப்பலங்காரர்பிறர்க்குபகாரமொன்றிலரோ.

கட்டளைக்கலித்துறை. (௬௩)

ஒன்றாகிமூன்றுவடிவாயடியவருள்ளத்துள்ளே *
நின்றாய்புறத்தும்புள்ளேறிவந்தாயெங்குநீநிறைந்தாய் *
நன்றாமுன்னாடல்பொன்னாடர்கைகூப்பியநங்கள்குன்றிற் *
குன்றாமரகதக்குன்றேகுன்றேந்துகுணக்குன்றமே. (௬௪)

கலிவிருத்தம்.

குணசலதியாமழகர்குலவரையின்முகில்காள் *
மணமலரின்வண்டுநிகர்வண்கணர்பிரிந்தார் *
கணவரவர்நெஞ்சதுகருங்கல்லவோவென் *
புணர்முலையில்வந்துவிளைபொன்னையுரையீரே. (௬௫)

கொச்சகம்.

இரமதிச்சோலைவரையிறைவர்மதிச்சோலைவரை *
சாரகவிமானமறார்தாரகவிமானமறார் *
ஆரணந்தாமோதரனாரயனாந்தாமோதரனார் *
சீரரங்கமொழியாரோதீயரங்கமொழியாரோ. (௬௬)

அறுசீர்க்கழிநெடில்.

மொழியுமினியீர்குழைவார்ந்தீர்முத்தமிழச்செய்யுட்பயின்றீர் *
வழியுமாசாரமுஞ்சிறந்தீர்மதுரக்கழைகாளினிக்கேளீர் *
பொழியுங்கொடையாரழகர்வெற்பிற்புராரிக்கெதிர்போய்த்தழல்விழி
அழியுங்காமன்பழிகாரணங்கேயிணக்கமாகாதே. (௬௭) [யால்

நேரிசைவெண்பா.

அங்காப்பொழிய அருணனுக்குத்தேன்அருவி *
அங்காப்பொழில்த்ரசலமே..........பங்கயமேல்
துங்கத்திருப்பிரியான்சுத்தத்தமிழ்ப்புலவர் *
சங்கத்திருப்பிரியான்சார்பு. (சூஅ)

வஞ்சித்துறை.

சாரலங்காரமால் *
சாரலங்காரமால் *
நீரலங்காரமால் *
நீரலங்காரமால். (சூகூ)

சந்தவிருத்தம்.

அலங்காரயமனும்புறஞ்சாயஇதழ்மென் *
றதுங்காதுபொருகும்பகனன்விழா *
இலங்கேசன்மகுடந்தகர்ந்தோடமுனையம் *
பெயுங்கார்முகமன்முன்பெண்மயல்கூறீர் *
கலங்காமலரன்முன்செலுங்காமதுவசம் *
களைந்தேவின்முதல்தின்றுமகிழ்வாயே *
சிலம்பாறுதனில்வந்திரம்பேடைகுமுறும் *
சிலம்போசைநறவுண்டகுருகாரோ. (எ0)

நேரிசைவெண்பா.

காமனூர்வெள்ளைக்கருப்புவில்லேகீற்றுமதி *
தாமவுடுச்சிந்துசரங்களே.............ஆமாம்
+ வளைத்தெய்வசிகாமணிநிகரில்லாவெள்
வளைத்தெய்வசிகாமணி. (எக)

கட்டளைக்கலித்துறை.

மணியுந்தியானநதிபாய்வனவெற்பன்மண்ணும்விண்ணும் *
தணியுந்தியானலங்காரனெங்கோவெனுந்தாமமென்னும் *
+ பணியுந்தியானந்தவேளென்னும்நீலம்பசுங்குரும்பைக் *
கணியுந்தியானமிடுந்திசைபார்க்குமென்றாணங்கே. (எஉ)

அறுசீர்க்கழிநெடில்.

ஆரமாமலையிற்றேன்றிஅங்கங்கோடிச்செய்திங்கால் *
ஈரமேவியதென்காற்றும்இந்துவும்சமனேகண்டீர் *
வீரமாலலங்காரர்க்குவிடவராவிடவராதோ *
தீரமேநாரைகாள்நீர்செல்லுவீர்சொல்லுவீரோ. (எஙு)

கட்டளைக்கலித்துறை.

சொல்லாரணப்பொருள்மாலலங்காரர்தண்சோலைவெற்பில்
வல்லாரிளங்கொங்கைமங்கையெங்கேமனுநூல்வழியித் *
செல்லாச்செலுத்தொருகோல்போல்முடங்கியதீங்கருப்பு *
வில்லான்ஐங்கோல்வென்றுமுக்கோல்விழைந்திட்டவேதியரோ.

சந்தவிருத்தம். (எச)

வேதாவெனச்சொல்சுதர்பூமேல்வரத்தளிரின் *
மீதாம்விசித்திரர்மறைவேராஞர் *
வாதாசனச்சயனர்ஆராமவெற்பிறைவர் *
வாராமலெய்த்ததுயர்சீராமா *
சாதாரணத்ததலவேள்பூசலிப்பொழுது *
தாராமடைக்குருகுதூதாமோ *
போதாவவைக்கறிவுபோதாவெனிற்பரிவர் *
போதாமலர்த்துளவுபோதாவே. (எரு)

[எண்சீர்க்கழிநெடில்.]

தாவுமன்புள்ளரவர்மேவுமன்புள்ளரவர் *
தக்கதாமலையினர்மிக்கசேமலையின்மேல் *
ஆவியுங்கூடுமாவோவியந்தேடுமே *
அலகிலாவஞ்சன்முன்னுலகெலாங்கஞ்சமும் *
காவியும்மகரமும்நாவியுஞ்சிகரமும் *
காந்தளுஞ்சங்கமும்பாந்தளுஞ்சிங்கமும் *
கோவையும்ஆரமும்பூவையுங்கீரமும் *
கொஞ்சுமின்சொல்லும்நீண்மஞ்சும்விண்வில்லுமே.

நேரிசைவெண்பா. (எசு)

மஞ்சுகாளுங்களைப்போல்மாரன்பூமாரிபெய்ய *
விஞ்சியதுபேராசைவெள்ளங்காண் ......... தஞ்சம்
வழுத்தீர்மதிச்செங்கண்மாலலங்காரர்க்கு *
வழுத்தீர்மதிச்செங்கண்மால். (எஎ)

வஞ்சிவிருத்தம்.

செங்கண்மாயவர்சீபதி *
மங்கையாரிடம்வண்புனம் *
கொங்கையுங்கணுங்குதலையும் *
அங்கரும்பிணையாகுமால். (எஅ)

தாழிசை.

மாலும்நான்முகனும்அரனும்ஆம்அழகர்மால்விடைச்சயிலமயிலனீர்
நீலராம்இறைவர்இன்னம்வந்திலர்கல்நெஞ்சர்போலும்இனிஎன்செய் [வேன்]
ஆலகாலம்வடகாலதாகவெதிரம்புகாலவில்வளைத்ததால்
காலகாலர்களுமெனவிருண்டுபலகால்திறந்தமழைகாலமே. (௭௯)

கட்டளைக்கலிப்பா.

மழையுறங்குதடஞ்சோலைமாமலை, வாணன்வாணன்கரங்களைப்பூதங்கள்
விழையும்பாரஎழுக்களென்றேபற்றி, வீசுமாலும்பர்வேதாமவருக்கே
பழையநான்மறைசிங்காசனமலர்ப், படுக்கைவீடுநடுக்கடல்வெண்ணெய்போல்
குழையுமன்பர்கருத்தேயுபரிகை, குளிர்நிலாமுற்றங்கோகுலங்காணுமே. (௮௰)

மடக்கு. எண்சீர்க்கழிநெடில்.

குலமலைமாயாவாழிகொடியவென்றன்சிந்தா ❋
குலமலைமாயாவாழிகொடியமதிளிலங்கை ❋
நிலமலையமாதவரினுணெறிந்தாய்மந்தா ❋
நிலமலையமாதவர்கைநின்னுமங்கண்டாய் ❋
பலவருணவாரீசநயனமுழுநீலோத் ❋
பலவருணவாரீசன்பயப்படவெற்பெடுத்து ❋
நலவரிசைக்கவிகைபுனைகாரோதென்குருகூர் ❋
நலவரிசைக்கவிகைவிடாநளினமின்னுயகனே. (௮௧)

கலிநிலைத்துறை.

நளினவிலோசனரழகர்புலோமசைநாதன்தன் ❋
இளவலுமாயவர்மாயவர்வெற்பினிலிலையோகாண் ❋
தளையவிழ்மல்லிகைபுல்லியவண்டர்தமியேன்போல் ❋
வளைகலைநாண்மதிதோற்றிடநின்றேமருண்மாலை. (௮௨)

அறுசீர்க்கழிநெடில்.

மருதொடித்துவிளவெறிந்துகுருந்திலேறி ❋
வடத்துறங்கிச்சோலைமலைவருமால்வெற்பில் ❋
இருதலைப்புள்ளென்னவிருந்திமைப்புநீங்கா ❋
எனைப்பிரிந்தபாதகர்நாட்டில்லைபோலும் ❋
அருவிமதமிக்களைமாதளைகள்தள்ளி ❋
அடையலர்மாக்கோட்டையிடந்தாவிதேக்கி ❋
தெருவுதொறுமால்யானைக்கன்றுபோலத் ❋
தென்றலிளங்கன்றோடித்திரியும்வேனில். (௮௩)

கட்டளைக்கலித்துறை.

திரியுங்கிரிக்கெதிர்சென்றோரழகர்திருமலைமேல் *
பரியுங்கொடித்தடந்தேர்வலவாபரிபோற்றிளைகள் *
விரியும்புனற்கடலுண்டமையாதுநம்மின்கொடிகண் *
சொரியும்புனற்கடற்கோடுதல்பார்நண்டுளிப்புயலே. (அச)

நேரிசைவெண்பா.

புயல்பார்க்குஞ்சாதகமேபோன்றேன்பொன்னாட்டின் *
இயல்பார்க்குஞ்சேமலைமேலெந்தாய்..........,தயையின் *
நிலையாதிருக்கவருணேயாமிடிதீர்த் *
தலையாதிருக்கவருள். (அரு)

வலைச்சியார். அறுசீர்க்கழிநெடில்.

அலைகடலினடுத்துயிலுமழகர்நாட்டில் *
அஞ்சொலெலாங்குரமாகவஞ்சனக்கண் *
வலையெறிவீர்பொய்கைவிட்டென்னுவிதாங்கும் *
வரலாறுகேளுமச்சமருங்குநில்லும் *
கலைமதியோடாரல்லர்வெளிச்சைமீறும் *
கவலைமுன்னீர்இரையேர்க்குங்கனகருப்பம் *
சிலையருவரால்மலங்குபடுதல்பாரும் *
திருக்கையுமழைச்சுறவைத்தேடுவீரோ. (அசு)

கொற்றியார். எண்சீர்க்கழிநெடில்.

தேடுதமிழ்வடிவழகர்நெடியவிடைமலைமேல் *
சிறியவிடைப்பெரியவிடைத்திருக்குலத்தினமுதே *
கூடுகின்றவெண்ணெயொடும்வேனிலானெய்யும் *
குறைவிலைவிற்போரதிகங்கொண்டதெழுபடிகாண் *
நாடறிந்தததிமோகமுறையிணக்கம்வையும் *
நவமணிசேர்பொன்னுழிநல்குவேன்மெல்ல *
ஆடைதனையொதுக்கிடுமென்பால்வாருமிச்சம் *
ஆழுழக்குமோர்போதுமகலேனந்தமையே. (அஎ)

தாழிசை.

நந்தனந்தனவென்றுகார்தனைநங்கைசெங்கைமுகுழ்க்குமின்
நளினமாதெனவிகலுமாரனைநமதுசாபம்விடாதெனும் *
சந்திரசூரியர்தங்களைச்செயசங்குசக்கிரமெனத்தொழும் *
சலதியாடுதல்யமுனைமூழ்குதல்தவமெனுந்தலைநாளிலே *

ஐந்தலைப்பணியுந்தருப்பையுமாகிலேலெனு னும்வேணுவாய் *
அமுதமுண்டுயர்வம்சமான்ததிட்டமேயெனுமாசைநோய் *
மந்திரத்திலரூதுதீர்க்கும்நின்வாசம்வீசியதுளவுகாண் *
வாசவன்பதிபரவுசீபதிவாசசுந்தராசனே. (அஅ)

கட்டளைக்கலித்துறை.

சுந்தரத்தோளரழகர் நன்னாட்டன்னத்தூவியந்தாள் *
மந்தரத்தீஞ்சொற்கிளிசெல்லுமோசக்கரவாளஞ்சுற்றி *
அந்தரப்பானுவுமோடச்செந்தீயும்நெட்டாழிவிழக் *
கந்தரத்தன்குளக்கண்போற்கொதிக்குங்கடுஞ்சுரமே. (அகூ)

பிச்சியார். எண்சீர்க்கழிநெடில்.

மேதினிபோற்றழகர்மலைத்திருப்பிச்சியாரோ *
வெளிப்பட்டீர்முனிவர்மலைத்திருப்பிச்சியாரோ *
கோதுபடுகுழல்போகவிளங்குதலைச்சுகமே *
கொள்ளைகொண்டீரிங்குவரவிளங்குதலைச்சுகமே *
காதிலிட்டசெம்பணியும்நடுக்காவியுடையும் *
கபாலமுஞ்சூலமுங்கண்டேநடுக்காவியுடையும் *
ஆதரியுமுங்கள்சிவமதவேடந்திரமே *
அறிவீரோயன்றெதிர்த்தமதவேடந்திரமே. (கூ0)

நேரிசைவெண்பா.

மதிகுலதனுமுகுந்தாவாமனுமாயா *
அதிரூபாராமாவழகா..............ஏதுவீரா
வெண்ணந்துளவாவிமலாகமலாட்சா *
தண்ணந்துளவாசரண். (கூக)

பதினான்குசீர்க்கழிநெடில்.

சரணகோகனகங்கற்பகநாறத்தண்டுழாய்முடிபரிமளிக்க *
சங்குநேமியும்வெண்ணிலாவெயிலெறிக்கத்தமனியத்துகில்பளபளக்க
மரகதமேனியெழில்பழுத்தொழுகமகாகுண்டலம்புயத்தலம்ப *
வனசலோசனங்களருண்மழைபொழியவந்தநின்கோலம்நான்மறவேன்
திரண்முலைக்கிராதநுணுகிடைக்கிராதசிறுமிகள்முகமதியெனவாய் *
திறந்தவாம்பலையும்பறந்தவண்டையுஞ்செந்தீயெழுபுகையெனப்பதறி
விரனெரித்தடங்காவிழிபுதைத்தோடிவெண்பளிக்கறைகுடிபுகுங்கா *
வெற்பலங்காராவுந்பலங்காராமெய்யனேதெய்வநாயகனே. (கூஉ)

அறுசீர்க்கழிநெடில்.

தெய்வசிகாமணியையெங்கள்சாரசோர *
சிகாமணியைக்கண்மணியிற்சிறந்தோன்றன்னை *
ஐவர்சகாயனைமுதலுந்தம்பியன்றோ *
அழைத்ததின்னந்தம்பிகளேயழைத்துவாரும் *
கைவருபந்தாடுமணிமுற்றமெல்லாம் *
கமிழ்பனிநீரிறைத்திறைத்துக்கழுநீர்போலும் *
மைவிழியார்குளமாக்கிவிட்டாரென்ன *
வன்பகையோபொருமுதலைவளர்க்கின்றாரோ. (௧௩)

எழுசீர்க்கழிநெடில். சந்தவிருத்தம்.

வளங்குலவுதண்டலைநெடுங்கிரிமுகுந்தர்நல்வரந்தினம்வழங்கழகர்தாம்
இளங்குதலைகொஞ்சியபசுங்கிளிகள்கெஞ்சியுமிரங்கியினம்வந்திலரையோ
உளங்களையும்என்சொலருனஞ்சமனடுங்கிடவுதைந்தவர்வெகுண்டுசுடவே
களங்கமறவெந்ததுமதன்சடலமென்றனர்கரும்புகைஒழிந்ததலவே.

மடக்கு. அறுசீர்க்கழிநெடில். (௧௪)

அலமேந்தழகர்பதிச்சுனையே, ஆடுமேமெய்ப்பதிச்சுனையே *
அணில்வாழ்கதிர்போமருந்தினையே, அகன்றேமேயமருந்தினையே *
குலவஞ்சுகமேகோகிலமே, கொம்பிற்புனத்திக்கோகிலமே *
கூடவளர்மாதவிப்போதே, கொடியார்க்கென்மாதவிப்போதே *
கலைமுன்பிரியக்கணக்கன்றே, கரும்பைப்பிரியக்கணக்கின்றே *
கணியார்காட்டுமருவலரோ, கணியார்காட்டுமருவலரே *
சலதிமுகக்குமுகமஞ்சே, தனித்தேதிமிடமுகமஞ்சே *
தையலொதுங்கும்வரவழையே, தையுண்டானல்வரவழையே. *

அகவல். (௧௫)

வரம்பெற்றிடுதலின் அருந்தவக்கிழவரும்
கண்டகளையடர்த்தலின்மண்டலத்தரசரும்
கற்பகமண்டலித்கனகநாடரும்
கானமுழக்கலின் ஆனகந்திருவரும்
எழுதருமறைகள்கூறிடலால்வியாதனும்
போதகமோதலிற்புராணவேதியரும்
சாந்தமுற்றிடுதலிற்றனிஞானிகளும்
மான்மதமடுத்தலின்வைணவக்குரவரும்
நவமணிவிரித்தலினன்னாவலரும்

இசைமகளுடன் றுதித்தெண்ணில்கோடி
பிரமர்போற்றியபரமசாமீ
அளவறுபிறைசளுங்களனுறுகறைகளும்
கணக்கிலாமழுக்களுங்குணக்கிலாக்கழுக்களு
உடையார்புலித்தோல்உடையாரிடையார் [ம்
அலகிலாஉமைகளும்இலகுபன்னதிகளும்
பதிகொளரத்தனர்குதிகொள்மத்தனர்
வீரபத்திரர்முதற்கோரபுத்திரரொடும்
அனந்தமுருத்திரர்தினந்தினந்தொழுதிடும்
திருவடியுடையபிரமமூர்த்தி
ஒருவிண்ணப்பமுன்பெருமுனிபின்னர்
நம்பிநன்னிழலிற்றம்பிபின்றொடரச்
செஞ்சிலையொடும்போய்க்கருஞ்சிலைமிதித்து
மின்னிளமேகமும்வில்லும்பிறையும்
அரவிந்தமுமாங்கதிற்சிலபூவும்
சங்கமுந்திகிரியும்பங்கயமுகுளமும்
காந்தளுங்கொடியும்பாந்தளுங்கதலியும்
மாவிளந்தளிரும்வகுத்தனைமீண்டும்
புன்மதியுடையவென்மனப்பாறையை
நற்பதப்படுத்தியற்புதம்விளைக்கும்
கண்ணநீயுண்ணக்கவர்ந்த
வெண்ணெய்செய் துவிடுவதுன்கடனே. (௬௬)

அன்னம்வழங்கலின் அகவாழ்க்கையரும்
செம்பொன்னீட்டலிற்றிருப்பாற்கடலும்
அச்சங்களைதலின் அமுதசஞ்சீவியும்
பூமிதந்திடுதலிற்புண்டரீகனும்
பொங்கருறைதலிற்பூவைவண்ணனும்
அம்பிகைகலத்திலின் அந்திவண்ணனும்
பொருமலையெறிதலிற்புலோமசைகொழுன
அகிலங்காட்டலின்அலர்கதிர்ஞாயிறும் [னும்
முத்தமிழ்துதித்தலின்முழுமதிக்கடவுளும்
சிவனுங்கடவுட்சிலம்பாற்றிறைவ
இருபதுசிகரத்தெண்ணிலாச்சிகரப்
பொன்மலைவளைத்தசெம்மலையேந்தும்
வெண்குன்றெடுத்தகருங்குன்றொருநாள்
முழைவாய்திறந்துமழைபோலிடித்து
முடுகுசெங்களத்துக்கொடுமரம்வாங்கி
அடுசமராடநடுநடுநடுங்கி
கொடிமுடிகவிழ்தலிற்குறுநகைபூத்து
நாளைவாவின்றுனநீள்பதிக்கேகென
விடைகொடுத்தருள்மால்விடைமலைவாண
உந்திக்கமலத்துச்சிவிட்டிறங்கி
கருத்திற்றெளிந்தகரகநீராட்டிக்
கண்டகண்போற்குளிர்தண்டுழாய்சாத்தி

தாழிசை.

வெண்ணெய்சூறைகொண்டகொண்டல்மேனிமாயர்வனகிரி *
விறலியென்றகோகிலத்துமென்பெடைக்கொர்சேவல்கேள்
+ { பண்ணுமிங்குதங்குடைந்துபாணர்தம்மைவென்றபின் *
பாதகற்குமருமையோவொர்பாணநின்னைவெல்வது *
வண்ணமார்பெழுந்தகொங்கைகிண்ணமென்பரதுமெயா *
வந்துபானிறைந்ததுண்மைமதலைபாலனென்பதும் *
எண்ணெயீதுபசுநரம்பெனுங்கொடிக்குவிட்டநீர் *
+ ஏற்குமோவவர்க்கும்யாழின்வீக்குகாயநின்பமே. (௯௭)

எழுசீர்க்கழிநெடில்.

காயரன்பிரமன்முதலோர்தொழுஞ்சனகர்நிமிர்காளமஞ்சனவழகர்மா
மாயரம்புவியுநவநீதமுங்கமிழ்பவளவாயர்கண்டிலர்கொலளிகாள்
பாயும்வெம்புலிபொருதமாமனென்பவன்விடுமொர்பாறைநெஞ்சினள்சிகரநேர்
ஆயகொங்கையிலொழுகுபால்பரந்தெனவிரியகோரசந்திரகிரணமே. (௯௮)

சந்தவிருத்தம்.

சந்தனநிழற்குளிருவந்ததகைதீரச் *
சந்திரமுகியேகவியுமிந்திரதருமானும் *
ஐந்தலையராவில்வருமழகர்பழமறைதே *
டரியமுனையார்முளரிதெரியமுனைபோல *
வந்தருணம்வைகையிதுபொய்கையிதுமுத்தின் *
வண்டலிதுகொண்டல்தவழ்மண்டபமிதல்லால் *
செத்திருநன்னகரமிதுசிகரமிதுசோலைச் *
சிலம்பிடைசிலம்பியசிலம்புநதியிதுவே. (௯௯)

கட்டளைக்கலித்துறை.

நதிபெற்றபாதர்மலையலங்காரர்நன்னாட்டணங்கே *
கதிபெற்றனென்அந்தமீகாமன்காமன்கழைகழையே *
பதிபெற்றஅவ்வங்கமிவ்வங்கஞ்சங்கம்பலித்ததங்கே *
துதிபெற்றமுத்தங்கிடைத்ததொப்பேதுன்சுகக்கடற்கே. (௱)

அறுசீர்க்கழிநெடில்.

சுகமும்பிகமும்மறையோதும்சோலைமலையிலலங்காரர் *
இகமும்பரமும்வகுத்தபிரான்எல்லாப்பதமுந்தரவாழ்வீர் *
மகமுந்தவமுஞ்செய்ததொக்குமானந்தனைக்கும்பிடும்வானும்
செகமும்பரவுஞ்சிலம்பாற்றுத்திருநீர்படியுமொருநீரே. (௱௧)

அழகர்கலம்பகம்முற்றும்.